# ஜனாதிபதி முல்லைத்தீவிற்கு பயணிக்கும்போது கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தத் தீர்மானம்!

முல்லைத்தீவிற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்னும் சில தினங்களில் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று அங்கே முன்னெடுக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது, இராணுவத் தினரால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள், வயல் நிலங்கள் என்பவற்றை மீண்டும் மக்களிடமே கையளிக்க வேண்டும், என கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக கேப்பாப்பிலவு மக்களின் ஊடகச் சந்-திப்பொன்று கேப்பாபிலவு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது, தற்போதைய நெருக்கடியில் தமது வாழ்விடங்களை இழந்து, வயல் நிலங்களை இழந்து, பொருளாதார ரீதியாக எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் கவலை வெளியிட்டனர்.

இராணுவத்தினர் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தமது காணிகள் விடுவிக்கப்படவில்லை, என்பது தொடர்பாகவும் மக்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமது வயல் நிலங்கள், நந்திக் கடல் உள்ளிட்ட மீன்பிடித் தளங்கள் அனைத் தும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்ட னர்.

இந்த நிலையில், தமக்கான சமூர்த்தி நிவாரணக் கொடுப் பனவும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தினர் தமது தென்னை மரங்களிலிருந்து தேங்காய்களைப் பிடுங்கிச் செல்வதனால் தேங்காய் இன்றி சமையல் செய்கின்ற நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, ஜனாதிபதி முல்லைத்தீவிற்கு பயணம் மேற் கொள்ளும்போது, அன்றைய தினம் கவனவீர்ப்புப் போராட் டம் ஒன்றை முன்னெடுத்து, மக்களின் பிரச்சினை தொடர்பில் மகஜர் ஒன்றையும் கையளிக்க உள்ளதாக அவர்கள் கூறினர்.




மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 20 செவ்வாய்க்கிழமை 04.07.2023 கதிர் 17



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## 'லிட்ரோ' எரிவாயுவின் புதிய விலை அறிவிப்பு

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 204 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

விலைத் திருத்தத்துக்கமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 2,982 ரூபா என்ற புதிய விலைக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 83 ரூபாவால் குறைக் கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,198 ரூபாவாகும்.

இதுதவிர, 2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 37 ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளது. இதற்கமைய 561 ரூபா என்ற புதிய விலைக்கு அது விற்பனை செய்யப்படும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்குக் கிடைத்ததாக தகவல்



உலக வங்கியால் இலங்கைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்ட 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியிலிருந்து முதல் பகுதியாக 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிதி வசதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக, உலக வங்கிக் குழுவின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு கடந்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகவும், ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை உலக வங்கியின் பணிப்பாளர் சபை கடந்த புதன்கிழமை அங்கீகரித்திருந்தது.

இந்தத் தொகையில், 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பட்ஜெட் ஆதரவிற்காகவும், 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சமூகப் பாதுகாப்பிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.



## நேபாள முன்னாள் பிரதமர் இலங்கைக்கு விஜயம்!

நேபாளத்தின் முன்னாள் பிரதமரான மாதவ் குமார் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 80ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் தங்கியிருக்கும்போது அவர், தெற்காசிய கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டத்திலும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழையுடன் கூடிய பருவநிலையால் மலையக மரக்கறி உற்பத்தி பாதிப்பு

மலையகத்தில் தற்போது காணப்படுகின்ற மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மரக்கறி உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக விவசாயிகளினால் பயிரிடப்பட்டுள்ள மரக்க-றிகளின் அறுவடை காலம் நெருங்கியுள்ள நிலையில், தொடர்ந்தும் அதிகரித்து வரும் மழையின் காரணமாக மரக்கறிகள் அழுகிப் போவதற்கான ஆபத்து உள்ளதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழையுடன் கூடிய பருவ நிலை தொடர்ந்து நீடிப்பதன் காரணமாக தற்போது சந்தைகளில் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. இந்தப் பருவ நிலை தொடருமாயின், மரக்கறிகளின் விலைகள் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.





## முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி குருந்தூருக்கு சென்று ஆய்வு

தொல்லியல் இடிபாடுகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது, என்ற நீதிமன்ற உத்தரவை மீறி குருந்தூர் மலையில் பௌத்த விகாரை அமைக்கப் பட்டுள்ள நிலையில், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் இன்று அங்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

மீண்டும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இந்தக் கள விஜயம் முக்கியத் துவம் பெற்றுள்ளது.


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்



# ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியை சந்தித்து உரையாடினார் கிழக்கு ஆளுநர்

இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இந்தியாவின் ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டிக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கும் ஆந்திரப் பிரதேசத்திற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அங்கு பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதோடு, பல முக்கிய தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொள்கிறார். இந்தவரிசையில் அவர், ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியையும் சந்தித்துள்ளார்.

கரும்பு, மிளகாய் விவசாயம், மருந்துத் தொழில்களை நிறுவுதல் தொடர்பான கூட்டுத் திட்டம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் உரையாடப்பட்டுள்ளது. அத்துடன், திருகோணமலைத் துறைமுகத்தில் உள்ள கைத்தொழில் பூங்காவில் கைத்தொழில்களை நிறுவுவதற்கு முதலீட்டாளர்களுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என ஆந்திரப் பிரதேச அரசாங்கத்திடம் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றி, திருப்பதி ஆலயத்தை வழிபடுவதற்கு இலங்கையில் ஏராளமான மக்கள் காத்திருக்கின்றனர் எனவும் அவர்களில் பலர் முதியவர்கள் எனவும் தெரிவித்துள்ள செந்தில் தொண்டமான், அவர்கள் இந்தியாவுக்குப் பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கையிலும் திருப்பதி ஆலய தரிசன நிலையத்தை நிறுவவேண்டுமென்று ஆந்திரப் பிரதேச முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியிடம் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அதிகாலை கோர விபத்து தாயும் மகளும் உயிரிழப்பு

## தந்தை வைத்தியசாலையில்

கார் ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கோர விபத்து காலி, கரந்தெனிய பிரதேசத்தில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விடுமுறை நாட்களில் மலையகத்துக்குச் சுற்றுலா சென்றுவிட்டு கரந்தெனிய பிரதேசத்திலுள்ள வீட்டுக்குக் காரில் வந்துகொண்டிருந்த குடும்பமே வீட்டுக்கு 500 மீற்றர் தொலைவில் விபத்தில் சிக்கியுள்ளது.

பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த கனரக வாகனம் காருடன் மோதியதில் அதில் இருந்த 38 வயதுடைய தாயும், 13 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர். காரைச் செலுத்தி வந்த 42 வயதுடைய தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கனரக வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் பொலிஸ்மா அதிபரின் விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டு விசாரணை இன்று

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான வழக்கில் இருந்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நிரபராதியாக விடுவிக்கப்பட்டதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இன்று இடம்பெற்றது.

பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறி பலர் இறக்கவும் காயமடையவும் காரணமாயிருந்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகிய இருவர் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தாக்குதல் தொடர்பாக போதுமான புலனாய்வுத் தகவல்களை முன்பே பெற்றிருந்தும் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் மூலம், அதனை அலட்சியம் செய்தார் எனத் தெரிவித்து பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிராகரிக்குமாறு கோரி, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு இன்று காலை நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான ஜவரடங்கிய உயர் நீதிமன்ற குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்திருந்தது.



# கதிர்காம எசல பெரஹெராவில் கலந்துகொண்டார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுப் பிற்பகல், வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் புண்ணிய தலத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கிரிவெஹெர விகாராதிபதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரரைச் சந்தித்த ஜனாதிபதி, நலம் விசாரித்தன் பின்னர் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார். பின்னர், சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

கதிர்காமம் வருடாந்த எசல மகா பெரஹராவின் இறுதி நாளான நேற்று, பெரஹராவை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கந்துல ஹஸ்தி ராஜாவின் மீது தாது கலசத்தை ஸ்தாபித்தார்.

அதன் பின்னர், பெரஹராவைப் பார்வையிட்ட ஜனாதிபதி, கதிர்காமம் சமன் தேவாலயத்திற்கும் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். விகாரைக்கு வந்திருந்த பக்தர்களுடனும் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கதிர்காம மகா தேவாலயத்தின் முன்னாள் பஸ்நாயக்க நிலமே, இராஜாங்க அமைச்சர் ஷஷேந்திர ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹான்போல், கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வரி செலுத்தாத மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து!

மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்துக்குள் வரி நிலுவைகளைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவற்றின் உரிமங்களை இரத்துச் செய்ய ஆலோசிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் முன்னணி மதுபான உற்பத்தி நிறுவனங்கள் இதுவரை 6.2 பில்லியன் ரூபா வரியை செலுத்தத் தவறியுள்ளன. இந்த நிலுவைத்தொகையை செலுத்துவதற்கு கடந்த வாரம் முதல் நடைமுறையாகும் வகையில் 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் உரிய வரிகளை வசூலிக்கவில்லை என்ற தொடர்ச்சியான விமர்சனங்களால், மதுவரித் திணைக்களம் நாட்டிலுள்ள பிரபலமான ஒன்பது மதுபான உற்பத்தியாளர்களுக்கு இந்தக் கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

சமீபத்திய புள்ளிவிபரங்களின்படி, மொத்த நிலுவைத் தொகையான 6.2 பில்லியன் ரூபாவில், 2.5 பில்லியன் ரூபா வரி நிலுவையாகவும், எஞ்சிய 3.8 பில்லியன் ரூபா தாமதக் கட்டணமாகவும் கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் 2000 பேர்வரை ஆளணிப் பற்றாக்குறை

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் மொத்தமாக 8000 பேர் அனுமதிக்கப்பட்ட ஆளணியாக இருந்தாலும், சுமார் 2000 பேருக்கான ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது இந்த விடயத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சுகாதார உதவியாளர்களாகக் காணப்படுகின்றார்கள். அதேபோல தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் என பல்வேறுபட்ட நிலைகளிலும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் புதிதாக உள்வாங்குவதில் தாமதம் காணப்படுகின்றபடியினால், எதிர்வரும் காலங்களில் சுகாதார அமைச்சின் ஊடாக இந்த நியமனங்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம், என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# வடக்கு மாகாணத்தில் கடந்த ஆறு மாதங்களில் 1,843 பேர் டெங்கு நோயாளிகளாக அடையாளம்!



## வைத்தியர் த.சத்தியமூர்த்தி எச்சரிக்கை

வடக்கு மாகாணத்தில் 1,843 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள், என வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆறு மாதங்களில் 1,843 பேர் டெங்கு நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளார்கள். இதுவரையில் தென்பகுதியில் இருந்து வந்த ஒருவர் மாத்திரம் டெங்குத் தாக்கத்தினால் இறப்புக்கு உள்ளாகி இருக்கின்றார்.

இது தவிர வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,491 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 65 பேரும், மன்னார் மாவட்டத்தில் 77 பேரும், வவுனியா மாவட்டத்தில் 106 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 104 பேருமாக மொத்தமாக 1,843 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாகாணங்களை ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாண நகரப்பகுதி, நல்லூர், கரவெட்டி பகுதிகளில் டெங்குத் தாக்கம் அதிகளவில் உள்ளது.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் டெங்குத் தாக்கம் அதிகளவில் இருக்கிறது. குறிப்பாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் டெங்குத் தாக்கம் அதிமாகும். ஏனைய நகரங்களிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

டெங்குத் தொற்றைக் குறைப்பதற்கு, குறிப்பாக டெங்கு பரப்பும் நுளம்புகளை இல்லாது ஒழிக்க வேண்டும். அந்த நுளம்புகள் பல்வேறு இடங்களிலும் பெருகி, டெங்கு நோயைப் பரப்புவதனால் இந்த நோய்த் தாக்கமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவில் ஏற்படுகின்றது.

எனவே, டெங்குத் தொற்றினைத் தவிர்ப்பதற்கு பொது மக்கள் தமது சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருந்து, பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும், என வைத்தியர் த.சத்தியமூர்த்தி அறிவுறுத்தியிருக்கிறார்.

# அச்சுவேலியில் வீடு புகுந்து தாக்குதல் மேலும் 24 பேர் சந்தேகத்தில் கைது!

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றுக்குள் நுழைந்து, அங்கிருந்தவர்களைத் தாக்கி சொத்துக்களைச் சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 58 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில், கைதான 28 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 9 பேரை எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

பெண்களின் படங்களை கணிணி ஊடாக செம்மையாக்கம் செய்து, சமூக ஊடங்களில் பதிவேற்றியதாக சந்தேகித்து ஜ/ன் மாதம் 28 ஆம் திகதி இரவு, அச்சுவேலிப் பகுதிகளிலுள்ள சிலர், அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த இரு இளைஞர்களைத் தாக்கி, சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரால், அமைதியின்மையைக் கட்டுப்படுத்த வானை



நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் காவல்துறையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளின் அடிப்படையில், மேலும் 24 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24 சந்தேகநபர்களையும் இன்றையதினம் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.



# புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட (22/24) ஆம் கல்வி ஆண்டில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 89 மாணவர்களுக்கு சிப்தொற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வே. ஜெகதீசன் அவர்களும், காரைதீவு பிரதேச சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் மற்றும் முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வீரகெட்டிய பிரதேசத்தில் நேற்றிரவு ஓட்டோ சாரதி சுட்டுப் படுகொலை

தென்னிலங்கையில் ஓட்டோ சாரதி ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பிரதேசத்தில் நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 38 வயதுடைய எஸ்.சஞ்சீவ என்ற நபரே துப்பாக்கிச்சூட்டில் சாவடைந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சஞ்சீவ, ஓட்டோவில் தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது பிறிதொரு ஓட்டோவில் வந்த இருவர், அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான சஞ்சீவ சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார் கொலையாளிகளைத் தேடி வருகின்றனர்.

# தராக்கி - ஈழத் தமிழ் ஊடக முன்னோடி கட்டுரைத் தொகுப்பு வெளியீடு




"தராக்கி - ஈழத் தமிழ் ஊடக முன்னோடி" என்ற கட்டுரைத்தொகுப்பு வெளியீடு செய்யும் நிகழ்வு இம்மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வானது மட்டக்களப்பில் உள்ள வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி, பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெளியீட்டு நிகழ்வினை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

# கோரக்கோயில் அகோர மாரியம்மன் ஆலய தீ மிதிப்புச் சடங்கு நிறைவு



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு கோரக்கோயில் ஸ்ரீ அகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்புச் சடங்கு நேற்று திங்கட்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது .

கடந்த வெள்ளிக்கிழமை கடல் நீர் எடுத்து வந்து திருக்கதவு திறத்தலுடன் ஆலயத்தின் தீமிதிப்புச் சடங்கு ஆரம்பமாகியிருந்தது. ஆலய பிரதம பூசகர் முருகேசு ஜெகநாதன் தலைமையில் தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று, பத்தாம் நாளான நேற்று தீ மிதிப்புச் சடங்கு நடைபெற்றது.

# அமெரிக்காவிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு காலிஸ்தான்கள் தீ வைப்பு



அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்தியத் துணை தூதரகத்துக்கு காலிஸ்தான் ஆதரவாளர்களால் தீவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவமானது,கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க நேரப்படி, அதிகாலை 1.30 முதல் 2.30 க்குள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்திற்கு அமெரிக்காவும் இந்தியாவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தத் தீ வைப்புக் காட்சிகளைப் பதிவிட்டு, ஒலிப்பதிவுடன் காலிஸ்தான் ஆதரவாளர்கள் காணொளியாக வெளியிட்டுள்ளனர்.

குறித்த தீ வைப்புச் சம்பவத்தையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். சம்பவத்தில் பொருட்சேதமோ யாருக்கும் உயிர்சேதமோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சான்பிரான்சிஸ்கோ நகரப் பகுதியில் தற்போது பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.



## சர்வதேச நாணயநிதியத்திடம் கடன் பாகிஸ்தானுக்கு நான்காவது இடம்

பாகிஸ்தான் தற்போது தனது வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனால், அங்கு பணவீக்கம், விலை உயர்வு போன்றவற்றால் மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இதனைச் சமாளிப்பதற்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் கடன்களை அந்த நாடு வாங்கி வருகிறது. கடந்த மார்ச் மாத நிலைவரப்படி, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கிய நாடுகளின் பட்டியலில் தொகை அடிப்படையில் ஐந்தாவது இடத்தில் பாகிஸ்தான் இருந்தது. இந்தப் பட்டியலில் ஆஜென்ரீனா முதல் இடத்தில் உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்திடம் மேலும் 3 பில்லியன் டொலர்களை கடனாக வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திட்டுள்ளது. இந்தக் கடனைப் பெறும்போது, சர்வதேச நாணய நிதியத்திடம் அதிகளவில் கடன் பெற்ற நான்காவது நாடாக பாகிஸ்தான் மாறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கியமான பணிகளில் இருக்கும்போது பொலிஸார் கைப்பேசி பயன்படுத்த தடை!

### கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவு



முக்கியமான பணிகளில் இருக்கும்போது பொலிசார் கைப்பேசிகளைப் பயன்படுத்தக்கூடாது.- என்று சென்னையின் புதிய பொலிஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட உத்தரவில், முக்கியமான வி.ஐ.பி. க்களின் பாதுகாப்பு பணியில் இருக்கும்போதும், சாலைகளில் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பணியிலும், விதிமுறைகளை மீறுபவர்களைக் கண்காணிக்கும் போதும் கைப்பேசிகளைப் பயன்படுத்த பொலிசாருக்கு அனுமதியில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் கைப்பேசிகளைப் பயன்படுத்தினால் கவனச் சிதறல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

முக்கிய சட்டம் - ஒழுங்கு பாதுகாப்பு பணி, கோவில் திருவிழாக்கள், முக்கியமான போராட்டங்களில் பணியில் இருக்கும்போதும் கைப்பேசிகளைப் பயன்படுத்தக்கூடாது.

உயர் காவல்துறை அதிகாரிகள் மேற்கண்ட தகவல்களை தங்களுக்குக் கீழ் பணியாற்றும் காவலர்களுக்கு அறிவுரையாக வழங்க வேண்டும். அனைத்து காவல் நிலைய தகவல் பலகைகளிலும் இந்த அறிவுறுத்தல்களை எழுதவேண்டும். காலை நேரத்தில் அணிவகுப்பு நடத்தும்போது தினமும் பொலிசாருக்கு உயர் அதிகாரிகள் இவற்றை அறிவுரையாக எடுத்துச் சொல்லவேண்டும், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

முன்னதாக, சென்னையின் புதிய பொலிஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர், நேற்றுக் காலை தனது அலுவலகத்துக்குச் சென்று முறைப்படி பணிகளைத் தொடங்கியிருந்தார்.

## தூத்துக்குடி மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை!



தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் வீசிவரும் சூறாவளிக் காற்றுக் காரணமாக தூத்துக்குடி மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், செவ்வாய்க்கிழமை காலையில் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகள் கடலுக்குச் செல்லாமல் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தென் தமிழகக் கடல் பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதியில் பலத்த சூறாவளிக் காற்று 45 கி.மீ. முதல் 65 கி. மீ. வரை சுழல் காற்றாக வீசி வருகிறது. இதனால், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என தமிழக மீன்வளத்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, தூத்துக்குடி விசைப்படகு மீன்பிடித் துறைமுகத்தில் 250க்கும் மேற்பட்ட விசைப்படகுகள், திரேஸ்புரம் நாட்டுப்படகு மீன்பிடி துறைமுகத்தில் 500க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் கடலுக்குச் செல்லாமல் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



## ஆப்கானிஸ்தானில் பெண்கள் நடத்தும் அழகுக் கலை நிலையங்களுக்கும் தடை

*ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி நடைபெற்று வருகின்ற நிலையில், அங்கு பெண்களுக்குப் பல தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.*

*இதுவரை காலமும் பெண்கள் பாடசாலைகள், கல்லூரிகளுக்குச் செல்லவும், பூங்கா, சினிமா மற்றும் பொழுபோக்கு இடங்களில் வேலைக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.*

*தற்போது, பெண்கள் அழகு நிலையங்களை நடாத்துவதற்கும் தலிபான்கள் தடைவிதித்துள்ளதாக ஆப்கானிஸ்தான் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*ஆப்கானின் நல்லொழுக்க அமைச்சின் ஊடகப் பேச்சாளர், தலிபான் அரசின் புதிய உத்தரவை நடைமுறைக்குக் கொண்டுவந்து, பெண்கள் அழகு நிலையங்களின் உரிமத்தை இரத்துச் செய்ய வேண்டும் என காபூல் நகராட்சிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.*

## கடாபியின் மகன் ஹனிபல் வைத்தியசாலையில் அனுமதி

ஆபிரிக்க நாடான லிபியாவில் கடந்த 1969 முதல் 2011 ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்த முகம்மர் கடாபியின் மகன் ஹனிபல் கடாபி, சிறையில் உண்ணாவிரதம் இருந்துவந்த நிலையில் உடல் நலக் குறைவால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சர்வாதிகாரியான முகம்மர் கடாபி, அந்தநாட்டு மக்களால் மேற்கொள்ளப்பட்ட புரட்சியில், சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, சிரியா-லெபனான் எல்லையில் பிடிபட்ட அவரது மகன் ஹனிபல், லெபனான் சிறையில் அடைக்கப்பட்டார்.

தான் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் சிறையிலேயே அவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இந்தநிலையில், அவருக்கு இரத்தத்தில் சீனி அளவு கடுமையாகக் குறைந்து உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சையளிக்கப்பட்டுவருவதாக லெபனான் செய்திகள் தெரிவிக்கின்றன.



# டிஜிட்டல் தொழிநுட்பங்களின் திறனை பயன்படுத்தும் நேரம் இது - ஜனாதிபதி



இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கு டிஜிட்டல் தொழிநுட்பங்களின் திறனைப் பயன்படுத்துவதற்கான நேரம் இது!, என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத நெருக்கடிக்கு முகங்கொடுத்து, இலங்கையர்களால் வெளிப்படுத்தப்பட்ட பின்னடைவு மற்றும் உறுதிப்பாடு குறித்து தெரிவித்துள்ள ஜனாதிபதி, இலங்கையை மேலும் முன்னேற்றுவதற்கு நவீன தொழில்நுட்பத்தின் திறனைப் பயன்படுத்த வேண்டிய நேரம் இது, என்று வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உச்சி மாநாட்டிற்கு அனுப்பிய செய்தியில் ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# அலி சப்ரி ரஹீம் தொடர்பிலான அறிக்கை சபாநாயகரிடம் சுங்கத்துறை சமர்ப்பித்தது

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பிலான விரிவான அறிக்கையை இலங்கை சுங்கத்துறை சமர்ப்பித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஹீம் துபாயிலிருந்து வரும்போது, 80 மில்லியன் பெறுமதியான தங்கப் பவுண் மற்றும் நவீன கைத்தொலைபேசிகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடாக சபாநாயகர் விடுத்த கோரிக்கைக்கு இணங்க, இலங்கை சுங்கத்தினால் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை அடுத்து நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பகிரங்கப்படுத்தப்படும் என்றும், அதன் போது இந்த விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய காரணங்களை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஹீமிடம் சபாநாயகர் கேட்டுக்கொண்டதாகவும், ஆயினும் இதுவரை அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கடந்த மே மாதம் 23 ஆம் திகதி வெளிப்படுத்தப்படாத தங்கம் மற்றும் கைத்தொலைபேசிகளுடன் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் இருந்து 3.5 கிலோகிராம் தங்கம் மற்றும் 91 கையடக்கத் தொலைபேசிகளை விமான நிலையத்தில் கடமையாற்றும் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியிருந்தனர்.

அவர் 7.5 மில்லியன் ரூபா அபராதம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் குறுங்கால கற்கை நெறி

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைநெறி மாணவர்களினதும், கலை கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையினால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் குறுங்கால சான்றிதழ் பாடநெறிக்கான இரண்டாம் தொகுதி மாணவர்களினதும் பிரியாவிடை நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

மனித உரிமைகள் கற்கை நெறியின் மாணவன் முஸ்தபா முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும், விசேட அதிதிகளாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி. எம்.எம். பாஸில் , பாடநெறியின் இணைப்பாளர் விரிவுரையாளர் றி.எப். சஜீதா, உதவி விரிவுரையாளர்கள், மாணவ, மாணவிகள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மிக விரைவில் மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான மனித உரிமைகள் குறுங்கால பாடநெறிக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் அங்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

# வெதுப்பக உற்பத்திகளின் விலை குறைக்க முடியாது என அறிவிப்பு

வெதுப்பக உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியாது என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டாலும் வெதுப்பக உற்பத்திகளின் விலை குறைக்கப்படாது என அச்சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது கூறியுள்ளார்.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டபோது, வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை.

எனவே, தற்போது மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டாலும், வெதுப்பக உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# கொழும்புக்கான தனது சேவையை மீண்டும் ஆரம்பித்த எயார் சைனா

இலங்கையின் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் சீனாவின் செங்டு ரியன்பு சர்வதேச விமான நிலையங்களுக்கிடையே, எயார்- சைனா விமான சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றிலிருந்து வாரத்திற்கு மூன்று விமானங்கள் என்ற அடிப்படையில் குறித்த விமான சேவை இடம்பெறுகிறது எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

அதன் செயற்பாடுகளை மீண்டும் தொடங்கிய நிலையில், முதல் விமானம் நேற்று இரவு 8.20 க்கு கட்டுநாயக்கவை வந்தடைந்தது. குறித்த விமானத்தில் பயணித்த 142 பேர், கண்டிய நடனத்துடனும் இலங்கையின் தேநீர் பரிசுப் பொதிகளுடனும் வரவேற்கப்பட்டனர்.

எயார் சைனா லிமிடெட் என்பது சீன மக்கள் குடியரசின் மூன்று பிரதான சீன விமான நிறுவனங்களில் ஒன்று. இதன் தலைமையகம் பீஜிங்கின் ஷுனி மாவட்டத்தில் உள்ளது.

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY
குறும்படப் போட்டி 2023

தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு வெளிவரும் "தமிழர்பொருண்மியம்" வார இதழ், ஓகஸ்ட் மாதத்தில் நடத்தவுள்ள "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வை முன்னிட்டு குறும்படப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.



முதல் பரிசு - ரூபா 25,000
2ஆம் பரிசு - ரூபா 15,000
3ஆம் பரிசு - ரூபா 10,000

» குறும்படங்கள் ஒவ்வொன்றும் 3 நிமிடத்திற்கு குறையாமலும் 8 நிமிடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

» குறும்படங்கள் எமது பொருளாதாரத்தைப் பேசுவதாக அமைதல் வேண்டும்.

» வேறு எந்த இடங்களிலும் வெளியிடப்படாததாகவும், யாரையும் புண்படுத்தாததாகவும் இருக்க வேண்டும்.

» நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

உங்களைப் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 20.07.2023

உங்கள் குறும்படங்களை HD தரத்தில் Google Drive வில் பதிவேற்றம் செய்து கீழ்காணும் மின்னஞ்சலுக்கு, முழுமையான விபரங்களோடு அனுப்பிவைக்க வேண்டும்:

Tamilseconomy@gmail.com

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 0777276949

# மதில் சரிந்து வீழ்ந்ததில் குழந்தை பரிதாப மரணம்

இரண்டரை அடி உயரமான மதில் வீழ்ந்ததில், ஒரு வருடமும் 9 மாதங்களும் நிரம்பிய ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

பூநகரியைச் சேர்ந்த இமானுவேல் தர்சன் சாதுசன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

முல்லைத்தீவு, சிலாவத்தையிலுள்ள உறவினர்களின் வீட்டுக்கு குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் சென்றுள்ளனர். தூண் போடப்படாத பழைய மதில் அருகில் குழந்தை தந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளது. அதன் மறுபக்கத்தில் நின்றிருந்த உறவினர் ஒருவர் குழந்தையை மதில் மேலாகத் தூக்குவதற்காக, மதிலில் ஒரு காலை ஊன்றியுள்ளார். அப்போது மதில் சரிந்து குழந்தை மீது வீழ்ந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட குழந்தை, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2023இல் வெளியிடப்பெற்றது.